பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 கிழமை 23 ஷஃபான் 3 இதழ் 80
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 5-5-84

ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு புதிய அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஊழியர்கள், உத்தியோகத்தர்களுக்கு சுகாதாரத்திணைக்களத்திலும் உத்தியோக பூர்வமான அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரி அமைய ஊழியர் ஒருவர் கடமை நேரத்தில் இராணுவத்தினரால் நாக்குதலுக்குள்ளானதைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி அமைய ஊழியர்கள் நேற்றுமுன்தினம் காலை திடீர் வேலை நிறுத்தத்தில் குதித்ததும், வைத்திய அதிகாரி வைத்திய களாநிதி நல்லுர்க்கிளிமை ஊழியர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததைத் தொடர்ந்து ஊழியர் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டதும் தெரிந்ததே.

வைத்திய அத்தியட்சர், ஊழியர் தாக்கப்பட்டது குறித்து பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கும் மேஜர் அனுப்பி வைத்துள்ளதுடன் உத்தியோக பூர்வமாக அடையாள அட்டைகள் வழங்கவும் சுகாதாரத் திணைக்களத்துடனும் தொடர்புகொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (மா)

இலங்கை குற்றச்சாட்டு: இந்தியா மீண்டும் மறுப்பு

(புதுடில்லி)

இலங்கை தமிழ் தீவிரவாதிகளுக்கு தமிழ் நாட்டில் புகலிடம் அளிக்கப்படுகின்றன என்றும், புகலிடம் வழங்கப்பட்டதாக இலங்கை அரசு தெரிவிக்கும் குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரமற்றது என்றும் இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் நேற்று ராஜ்யசபையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

பயணப்புகுதி 80,000-க்கு அதிகமான தமிழர்கள் இந்தியாவில் அடைக்கலம் தேடியுள்ளனர் என்றும் இவர்களுக்கு நடமாடும் ஊட்டி இந்தியா செல்லாமல் தடுக்க வேண்டியது இலங்கை அரசின் கடமை என்றும் திரு. நரசிம்மராவ் குறிப்பிட்டார்.

சர்வகட்சி மாநாடு

(தொழுதுப்)

ஒன்பதாம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் யோசனைகள்பற்றி இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு இலங்கை அரசு அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

9-ம் திகதி கூடும் மாநாடு முக்கிய விஷயங்கள் குறித்து இறுதி முடிவு எடுப்பதற்காக 18-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்படலாம் என்றும் அறியப்படுகிறது.

45 கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டன

(தொழுதுப்)

நேற்று கொழும்பு நகரத்தில் சுற்றுக்காவல் செய்யப்பட்ட பி. பெரேரா பிரதேசத்தில் 16 வயதுடைய பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றியுள்ளார் என்றும் கிறந்த சேவைக்காகப் பல விருதுகள் பெற்றதுடன், அறுபத்தைந்து தடவைகள் பாராட்டப்பட்டவர் என்றும் அவருக்கு எதிராக முறைப்பாடு எதுவுமே கிடையாது என்றும் ராஜாங்க அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆயுதங்களையுடையோர் நேற்று நடத்திய திடீர்ச் சோதனையில் கொழும்பு நகரத்தில் 45 கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டன என்றும் பலர் கைதுசெய்யப்பட்டனர் என்றும் ராஜாங்க அமைச்சு தெரிவித்தது.

எம்.ஜி.ஆர். தலைமையில் அனைத்துக்கட்சி பிரதிநிதிகள்

இந்திராவுடன் இன்று சந்திப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி. ராமச்சந்திரன் தலைமையில் அனைத்துக் கட்சி பிரதிநிதி குழுவினர் இன்று சனிக்கிழமை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்திக்கவுள்ளனர்.

இக்குழு இலங்கைத் தமிழரின் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமருடன் விவாதிப்பதற்காக நேற்று மாலை புதுடில்லி புறப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரனால் கடந்த மாதம் சென்னையில் கூட்டப்பட்ட அனைத்துக்கட்சிகளின் கூட்டத்தில் தி மு க. வும், திராவிடர் கழகமும் தனிச் ஏனைய கட்சிகள் கலந்து கொண்டது தெரிந்ததே

(வெ)

கிண்ணியா கொள்ளை

ஏழு பேர் கைது

(தொழுதுப்)

கிண்ணியா மக்கள் வங்கி ஒரு லட்சம் கொள்ளை தொடர்பாக ஏழுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். செயலகத்திலிருக்கும்

இலங்கை வங்கி கிளையில் ரூ.13000 கொள்ளை!

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். செயலக இலங்கை வங்கிக் கிளைக்குள் புகுந்த இனந் தெரியாத கொஷ்டி ஒன்று, துப்பாக்கி முனையில் அங்கு வரவில் நின்ற பாதுகாப்பு ஊழியரின் துப்பாக்கியை அபகரித்ததுடன் சுமார் 13 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் கொள்ளை அடித்துச் சென்றுள்ளது.

நேற்று நண்பகல் இக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

சுமார் நான்கு பேர் கொண்ட கொஷ்டியினரே இக் கொள்ளையை நடத்தியதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

பிற்மன்
லண்டன் பரீட்சைகள்

28-1-84ல் எமது நிலையத்தில் நடைபெற்ற மேற்படி பரீட்சையின் கருக்கெழுத்து, தட்டெழுத்து உட்பட சகல பாடங்களின் பெறுபேறுகளும், தராதரப் பத்திரங்களும் லண்டனிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளோம். ஜூலை 84 பரீட்சையின் விண்ணப்ப முடிவு 31-5-84 சகல விபரங்களுக்கும் நேரடியாக அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

R. Chandrapalan,
Local Examinations Secretary,
OFFICE SKILLS EXAMINATIONS, CENTRE,
C/o S. T. C. A., 37, (149) Sivan Pannai Road, Jaffna.
(8158)

மற்றுமொரு கான்ஸ்டபிள் படுகொலை!

(வ. சோதிநாதன்)

கொடிகாமத்தில் நேற்றுக் காலை பொலிஸ் கான்ஸ்டபிள் பி சிவகுப்பிரமணியம், [47 வயது] துப்பாக்கியால் சுட்டும் கூரிய ஆயுதத்தினாலும் வெட்டப்பட்டும் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது தலை உடலிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு மீசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் சிவகுப்பிரமணியம் நேற்றுக்காலை வீட்டிலிருந்து தமதுமகன் கிஷோகுமாருடன் [வயது 10] சந்தைக்கு விறகுவாங்க கொடிகாமம் வந்து கொண்டிருந்தபோதே இச்சம்பவம் நடந்தது.

மகனை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விட்டு விடுவதற்

(8ம் பக்கம் பார்க்க)

கொடிகாமம் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டது

[யாழ்ப்பாணம்

கொடிகாமத்தில் நேற்று வழக்கமாக கூடும் பெரும் சந்தை கடைகள். பட

சாமான்களுக்கு மாணவர்கள் செல்லவில்லை. கடைகள் வர்த்தக நிலையங்கள் பாவும் பூட்டப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துகள் குறைவாக இருந்தது. விதிகள் வெறிச்சோடிக் கிடந்தன சனநடமாட்டம் எதுவும் இல்லை.

கொடிகாமத்தில் நேற்றுக் காலை பொலிஸ் கான்ஸ்டபிள் சிவகுப்பிரமணியம் கொல்லப்பட்டதை தொடர்ந்து அப்பகுதியில் எங்கும் பதட்டம் நிலவியது.

மக்கள் அச்சத்தினால் வீதிகளில் நடமாடாமல் வீடுகளிலேயே மக்கள் முழுவதும் தங்கியிருந்தனர்

சம்பவம் நடந்த இடத்திற்கு, சிறிது நேரத்திற்கு பொலிஸார் விரைந்து சென்றனர். உச்சாய் வீதியில் சகல போக்குவரத்துகளும் நடைசெய்யப்பட்டன

மக்கள் வங்கிக் கிளையின் பாதுகாப்பு ஊழியரின் துப்பாக்கிகள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரசந்தையின் கேந்திரமாடியில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் காவலில் நின்ற இரு வங்கி பாதுகாப்பு ஊழியர்களின் துப்பாக்கிகளை இனந்தெரியாத கோஷ்டி ஒன்று அபகரித்துச் சென்றுள்ளது

நேற்றுக் காலை இச் சம்பவம் நடைபெற்றது.

நேற்றுமாலை மக்கள் வங்கிக் கிளையில் பாதுகாப்பு ஊழியர்கள் இருவரி துப்பாக்கிகளுடன் நின்றுகொண்டிருந்தபோது. இனந்தெரியாத மூன்று இளைஞர்கள் பாதுகாப்பு ஊழியர்களைத் தாக்கிவிட்டு, அவர்கள் வைத்திருந்த இரு துப்பாக்கிகளையும் பறித்துக்கொண்டு

(8ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

சேவை

படத்திலே தெளிவுச் சிறப்பு, ஒலி விலை தரமான Vgp, Pyramids, Delux, Kavlco, Esquire Thomsan வெளியிடும் முதல்தரமான புதிய வர்ண வீடியோ படங்களை எழுக்குகிறோம் பார்த்தவர்கள் திருப்தி யடைகிறார்கள். கேவிக் விடியோரி, 38, வேம்படிவீதி யாழ்ப்பாணம். 2160

கல்வி

ஜி. சி. ச, சாதாரணதரம், அதிலது உயர்தர மாணவர்கள். தென் இந்திய பல்கலைக்கழகக் கல்லூரிகளிக் யட்டப்படிப் வைப்பெற, ஆலோசனை பெற விண்ணப்பியுங்கள். "அன்பு நிறுவனம்", 48/1, கஸ்ட்டி அம்மன்வீதி, யாழ்ப்பாணம். 2159

பயிற்சி

பாவர் ஆசிரியர் தராதரப் பத்திரம்பெற, 1984ம் ஆண்டுக்குரிய பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஜி. சி. ச. (சா) சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். இன்னும் சில மாணவருக்கே இடமுண்டு விண்ணப்பிக்கும் முகவரி: பாவர் ஆசிரியர் சங்கம், 418, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 2158

தேவை

யாழ் கல்லூரி ஆசிரியருக்கு எல்லா வசதிகளுடன் கிறிஸ்தவ யாழ் கல்லூரிக்கு அண்மையான இடங்களில் தேவை. தொடர்பு: Dharmaraj Jaffna College Vaddukoddai. 2091

வகுப்புகள்

TOEFL, O/L Spoken ENGLISH கற்பித்தல், பரீட்சைகள், கல்லூரிகளுக்கு உதவிப் பேச்சு TEAM Teaching லண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரிகளால் வழங்கப்படும். 10-5-84 காலை The Poly Technical Institute 34/16, Temple Road, Jaffna. 2150

காணவில்லை

பாஸ்போர்ட் (இல 133273) ரிற்றேன் ரிக்கற் வெளிநாட்டு வங்கி ஆவணங்கள் செக் ஆகியன கடந்த 27-4-84 பொழுதிலிருந்து பருத்தித்துறையை நோக்கி வந்த வி. ஆர். வி. பஸ்சில் தெல்லிப்பழக்கும் - யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தகுதியான பேதிய சன்மானம் வழங்கப்படும். வி. மண்டபேஸ்வரன் வல்லிபுரம் பரியாரியார் ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 2148

விற்பனைக்கு

சம்பத்திரிசியார் கல்லூரி, செண். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றிற்கு அண்மையில் பல வசதிகளுடன் கடிய விற்பனைக்குண்டு இ. மரியாம்பிள்ளை, சங்கிலித்தரணி, 7/6, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். 2089

காங்கேசன்துறை கிறிஸ்மஸ் பிரதான வீதியில் இலங்கை வங்கிக்கும் அமிர்தநிச்சயை அலுவலகத்துக்குமிடையில் நல்ல நீர் கிணறுடன் 2 பரப்பு காணியும் ஆறு அறைகளுடன் சகல வசதிகளும் நிறைந்தவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு முகவரி: த. தேவராஜன், மாவிட்டபுரம் மேற்கு வீதி, உடுவில், கல்லூரி. காங்கேசன்துறையில் இ. செல்வராசா (Teacher) 55/4, மாம்பிரான் வீதி, காங்கேசன்துறை. 2097

விற்பனைக்கு

நல்லதரமான வெள்ளையும் கண்ணிறமும் கலந்த Pocket Dogs விற்பனைக்குண்டு சனி, ஞாயிறு தினங்களில் தொடர்பு கொள்ளவும். கே. வரதேவன், வலிகாமம். 2104

நல்ல நிலையிலுள்ள இரண்டு மொறிஸ் மைனர் கார்கள் விற்பனைக்குண்டு. க. வேலுப்பிள்ளை சோலிக் சந்தை (கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகாமையில்) காரவெட்டி. 2118

அச்சுவேலி சன்னதிவீதி, 2ம் ஒழுங்கையில் 12 பரப்புக்காணி (முழுக்கறும் அல்லது பிரித்தும்) உடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: கே. பி. ஆனந்தன், "ஜெனரல் ரேடி சென்ரர்", இல. 2, நவீனசந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். 2122

புத்தம் புதிய பச்சை நிற Sharp குளிர்சாதனப்பெட்டி உடன்விற்பனைக்கு தொடர்பு இல 8, பலாலி வீதி, ஆரும் ஒழுங்கை. 2127

ஊரெழு நீர்வேலி ரோட்டில் யாத்தலில் 75 பரப்புதோட்டக் காணி கைதடியில் மானிப்பாய் வீதியில் 4 பரப்பு வெண்ட இருகாணிகள் 6 பரப்பும் 16 பரப்பும் கொண்ட வேறு இருகாணிகளும் உண்டு தொடர்பு: A. C. ஜோர்ஜ் (உரிமையாளர்) 480, நாவலர் வீதி, நல்லூர். 2128

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாக மாவட்ட நீதிமன்றம்

ஏழாலை தெற்கு முத்துத்தம்பி சோதராசாவின் மரணசாதன மில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

காலஞ்சென்றவர் இரத்தினசபாபதிப்பிள்ளை கைலைநாதன் சரஸ்வதி ஏழாலை தெற்குசுன்னாகம்.

மனுதாரர்

வழ. இல: T/179

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலேயுள்ள குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் வாதிணைக்க பின்னுறுதிக் கட்டளை பதிவுசெய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு மாசி மாதம் 1-த் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதிவுசெய்யப்பட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுணதாக்கப்படலாகாதென்பதற்கும் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17த் திகதி

மன்றின் கட்டளைப்படி (ஒப்பம்)

ஆழ்வார் சிவபாதசுந்தரம் பதிவாளர்

வரைதல்: (ஒப்பம்) அ. உமாசங்கர்

மனுதாரரின் சட்டத்தரணி

காரணங்காட்டுத் திகதி 9-5-84க்கு நிர்ணயிக்கப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி (ஒப்பம்)

ஆழ்வார் சிவபாதசுந்தரம் பதிவாளர் 2156

விற்பனைக்கு

கிளிநொச்சியில் கண்டி வீதியில் வர்த்தக விநாயகர் ஆலயம் அமைப்பதற்குரிய காணி விற்பனைக்குண்டு. விபரம்: பார்க்கிய நேசன், கண்டி வீதி, கிளிநொச்சி. 2138

நல்லூர் செம்புத் தெருவில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: க. நாகேந்திரம், 84/4, செம்புத்தெரு, நல்லூர். 2141

யாழ் மாநகரசபை எல்லைக்குள் சகல தளபாட வசதியுடன் ஒரு தனியார் கல்வி நிறுவனம் விற்பனைக்குண்டு. விளக்பர இல: 2142 C/o சமநாடு யாழ்ப்பாணம். 2143

புதிய இரண்டைக் கதவுள்ள நாஷனல் NR 232 மொடல் குளிர்சாதனப் பெட்டியும் Brother 1618 மொடல் ஆங்கிலத்தட்டுப் பொறியும் விற்பனைக்குண்டு. விபரம் கண. மொக்னையா 219, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2140

அரியாலை நெடுங்குளம் வீதிக்கு அருகாமையில் 8 பரப்புக்காணி முழுமையாக அல்லது பகுதியாக உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T சோமசேகரம் 23, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22692 (2157

4½'க்கு மேல் கத்தளவுடைய சமண்டல மரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. சற்குணகிங்கம் 14, தேவாலய வீதி, சாவகச்சேரி. 2146

பலாலி வீதிக்கு அண்மையிலுள்ள ஊரெழு யாத்தல் வீதியில் தோட்டக்காணி 75 பரப்பு இரண்டு கிணறுகளுடன் உண்டு 25 பரப்புக்களாக விற்கப்படும். விபரம்: த. இ. பரமசாந்தரம் சோமாடாவிக் கிழக்கு, சோமாடாவில். 2147

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

கல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சண்டிலிப்பாய் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் பெண் பொன்னம்மா என்பவரின் மரணசாதன மில்லாத மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர். மரணசாதன) நியமனாதிக்கம்) இல. ரி/198

தற்பிறகுத்து நாகலிங்கம் சண்டிலிப்பாய் தெற்கு, சண்டிலிப்பாய்.

எதிர்மனுதாரர்.

1. நாகலிங்கம் லேப்பாங்.
2. நாகலிங்கம் ஜெகதீசன். இருவரும் 49 கம்போர்னி ஈஸ்ட்லூ லண்டன்- 15 (தங்கள் அற்றோணித்தத் துவகாரன் மனுதாரர் மூலம் தெரிவிக்கிறார்கள்)

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அவற்கிணைக்க பின்னுறுதிக் கட்டளை பதிவுசெய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு ஆனி மாதம் 6ம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதிவுசெய்யப்பட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுண கட்டளை யாக்கப்படலாகாது என்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984ம் ஆண்டு பங்குனி மாதம் 60ம் திகதி.

கோவிந்தன் கட்டளைப்படி

ஆழ்வார் சிவபாதசுந்தரம் பதிவாளர்.

ச. யோகராசா மனுதாரரின் சட்டத்தரணி 2031

கொக்குவில் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கம்

வருடாந்தப் பொதுக்கூட்டம்

19-05-1984 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர். பிரேரணைகள் 16-05-84 காலை 10-00 மணியளவு ஏற்றுக்கொள்ளப்படும்.

புகையிரத நிலைய வீதி, செங்கானா கொக்குவில். திரு. ந. சிவானந்தராஜா

கவனிப்பு: தகவு செய்த அங்கத்தவர் சந்தாப்பணத்தை அனுப்பிவைக்கவும். 2151

A/L 86 தூய பிரயோக கணிதம்

ஆரம்பம்: 5-5-84

10·00: பிரயோக கணிதம்
11-30: தூய கணிதம்

74 A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். TUTOR:- RAVIMOHAN

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்) (2155)

நவீன முறையில் தயாரிக்கப்பெற்ற

பனை வெல்லம்

சகாய விலையில் விற்பனைக்குண்டு.

விபரங்கட்கு:
சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்,

பனை அபிவிருத்திச் சபை,

188 1/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 22094 (2059)

VACANCIES

கீழ்க்காணும் துறைகளில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

1. Welders ஒட்டுனர்
2. Fitters பொருத்துனர்
3. Tinkers உலோக வேலையாளர்

Promoters Engineering Company Ltd.

844, Point Pedro Road, Nallur, Jaffna.

ஓராண்டு நினைவஞ்சலி

திரு. பொ. ஜெயராசா

மலர்வு 31-3-40

மறைவு: 4-5-83

ஒளிவிளக்கான எம் அன்புத் தெய்வமே அருளைக் கணவரே, நினைவாய் பிரவாரம் எம்மை விட்டுப்பிரிந்து ஓராண்டு என்னிரு கடந்துவிட்டது. வரம் நிறைந்த தந்தையாகத்திகழ்ந்த அன்புத் தெய்வமே உங்களின் மறக்கமுடியா அன்பு நினைவுகளும் பிரிவுத்துயரும் எம் நெஞ்சை விட்டு அகலாது. உங்களின் தூயஆத்மா எங்களை வழிநடத்திச் செல்கின்றதென்றோம்.

உங்கள் நினைவாக துயருறும் மனைவி, பிள்ளைகள்.

யோகராசா வீதி, அச்சுவேலி, 2149

● பஞ்சாப் மாநில சீக்கிய கோவில்களில்

பணயம் வைக்கப்பட்ட 350 பேர்

இந்திய இராணுவத்தால் விடுவிப்பு

16 தீவிரவாதிகளும் சரணடைந்துள்ளனர்

புதுடில்லி, மே. 4

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலுள்ள மூன்று சீக்கியக் கோவில்களில் பணயம் வைக்கப்பட்டிருந்த 350 பேரை இந்திய இராணுவம் விடுவித்துள்ளது. இவர்களில் பெண்களும், சிறுவர்களும் அடங்கியிருந்தனர். 16 தீவிரவாதிகள் சரணடைந்துள்ளனர்.

இந்திய இராணுவம் மேற்கொண்ட இந்த நடவடிக்கையின்போது உயிரிழப்போ, சேதமோ ஏற்படவில்லை. தீவிரவாதிகள் சரணடைந்த பின்னரே இராணுவத்தினரும், பொலிசாரும் இக் கோவில்களில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இத்தேடுதல் நடவடிக்கையின்போது கோவில்களிலிருந்து 18 ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டன. கோவில்களின் மின்சாரவிநியோகமும் துண்டிக்கப்பட்டது

கடந்த மாதம் 26ம் திகதி இக்குள்ள கோவில்களில் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது 7 பேர் பலியாகினர்.

உள்ளூர்வாசிகளின் ஒத்துழைப்புடன் இத்தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டமை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்குக் கிடைத்த பெரு வெற்றியாகுமென்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர்வாசிகள் இத்தீவிரவாதிகளுக்கு உணவுகளையோ அல்லது உதவிகளையோ வழங்கவில்லை.

(வெ)

லிபியாவின் தாக்குதல் குறித்து

விழிப்பாக இருக்கும்படி உலக பிரிட்டிஷ் தூதரகங்களுக்கு வேண்டுகோள்

லண்டன், மே. 4 கேட்டுள்ளது.

லிபியாவின் தூண்டுதலின் பேரில் மேற்கொள்ளப்படும் தாக்குதல் தொடர்பாக விழிப்பாக இருக்கும்படி உலகிலுள்ள பிரிட்டிஷ் தூதரகங்களையும், கம்பெனிகளையும் பிரிட்டன் லிபியாவுடனான ராஜதந்திர உறவுகளைப் பிரிட்டன் கடந்த வாரம் துண்டித்ததுடன், லிபியாவின் ராஜதந்திரிகளையும் அங்கிருந்து வெளியேற்றியிருந்தது.

லிபிய தீவிரவாதிகளுக்கு தீங்கிழைக்கும் நாடுகளுக்கு எதிராகக் நடவடிக்கை எடுக்கப்படுமென்று லிபிய ஜனாதிபதி கேர்னல் கடாபி அறிவித்துள்ளமையடுத்தே பிரிட்டன் இத்தகையதொரு வேண்டுகோளைத் தூதரகங்களுக்கும் கம்பெனிகளுக்கும் விடுத்துள்ளது.

லண்டனிலுள்ள லிபிய தூதரகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது லிபிய அதிகாரி ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது பிரிட்டிஷ் பொலிசார் ஒருவர் மரணமானது தெரிந்ததே.

(வெ)

அப்பர் சுவாமிகள் குருபூசை

(சரவணை)

சரவணை தேவபுரம் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் சரவணை சைவ இளைஞர் மன்றம் ஆதரவில் அப்பர் சுவாமிகள் குருபூசை நடைபெற்றது. பகல் விசேட அபிஷேகமும் காலை அன்னதானமும் இடம்பெற்றன.

அலங்காரத் திருவிழா

(சரவணை)

சரவணை பள்ளம்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் அலங்காரத்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிப் பத்து தினங்கள் நடைபெறும்.

நாளை 'இறைபணிநிற்றல்' நூல்வெளியீடு

(மானிப்பாய்)

"கிந்திரச் சுடரொளி" ஆசிரியர் திரு. நா. செல்லையா எழுதிய 'இறைபணி நிற்றல்' என்னும் சைவசித்தாந்த நூலின் வெளியீட்டுவிழா நாளைஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

கசட் உலகின் இன்றைய 'கதாநாயகன்'

maxell

★ எலக்ரோனிக் கைக்கடிகாரங்கள், ★ கமராக்கள், ★ கிக்குவேற்றர்கள்,
★ கிஸ்டர்களிலான பற்றி வகைகளிற்கு—'மக்சல்'
சீனா, ஜப்பான், ஹொங்கொங் இல் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விலைவாசிப் பொருட்களுக்கும்,
சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 3'' மோட்டர்களை கிக்கறையாக கொத்தமாகப் பெற்றுக்கொள்ள,
இன்றே விஜயம் செய்யுங்கள்

MAXS DISTRIBUTORS

20 JUBILEE BAZAAR, JAFFNA. (ராணி சினிமாவுக்கு அருகில்)
இன்றுமுதல் மேலதிக விபரங்களிற்கு:
மக்ஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
இல. 14. யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய். [மருதடிப் பிள்ளையார் அருகில்]
எமது வாடிக்கையாளர்களிற்கு: எமது வான் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம். அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.

ஜப்பான் பிரதமர் இந்தியா விஜயம்

புதுடில்லி, மே. 4

ஜப்பான் பிரதமர் திரு நாகசோனி மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று இந்தியா வந்துசேர்ந்தார்.

பம்பாய் விமானநிலையத்தில் வந்திறங்கிய இவரை மகாராஷ்ட்ர மாநில கல்வியமைச்சர் வரவேற்றார்.

இன்று புதுடில்லிசென்றடையும் திரு. நாகசோனி, அங்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து இரு நாடுகளுக்கிடையே உறவுகள், மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடவுள்ளார்.

ஜப்பான் பிரதமர் திரு நாகசோனியின் இந்திய விஜயம் அரசியல், பொருளாதாரத் துறைகளில் இந்திய - ஜப்பான் உறவுகளை வலுப்படுத்துவதாக அமையுமென்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஜப்பான் பிரதமருக்கு இராப்போசன விருந்தளித்து கௌரவிக்கவுள்ளார்.

ஜப்பான் பிரதமர் இந்திய ராஜ்யசபை, லோக்சபை உறுப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். திரு நாகசோனி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பவுள்ளார்.

GANA'S ACADEMY
தட்டாதெரு சந்தி

A/L 86 புதிய பிரிவு
ஆரம்பம் 5-5-84

சனி/ஞாயிறு மட்டும்

1-30—பௌதீகம்: சுந்தர்
2-30—இரசாயனம்: சண்
3-30—விலங்கியல்: தம்பிராஜா
4-30—தாவரவியல்: சர்வா/ரட்ணா

O/L புதிய பிரிவு 5-5-84 மாலை 1-30 மணிக்கு ஆரம்பம்

விஞ்ஞானம்: இரா. செல்வவடிவேல்
சமூகக்கல்வி: கமலநாதன்
கணிதம்: வாமன், லீலா
தமிழ்: தெணியான், சின்னையா
ஆங்கிலம்: எம். பெருமான்

தலைமையகம்: SCIENCE ACADEMY, JAFFNA.

மணிவாக்கு

நாம் மெதுவாக நடப்பவராக இருக்கலாம், ஆனால் ஒருபோதும் பின் செல்லமாட்டேன்.

— ஆபிரஹாம்லிங்கன்

நமது நோக்கு

பீரங்கியும் பிரார்த்தனையும்

வத்திக்கான் - அமெரிக்க சந்திப்பு கூடிய விரைவினால் ஆவலோடு நடைபெற்றது

இரு தலைவர்களும் தத்தம் பயணத்தின் இடைவெளியில் விமான மாற்றத்திற் ஏற்பட்ட வசதியைப் பயன்படுத்தி அரைமணி நேரம் மனம் திறந்து பேசினார் போல் தோன்றுகிறது.

இவ்வித ஆடம்பரமான ஆயுதம் எதுவுமில்லாத சமயோசித பேச்சுவார்த்தைகளில் ஒருபுதிய கிந்தனைப் போக்கு ஏற்படுவது வியப்பல்ல.

இராணுவ ஆயுதங்களை விட பிரார்த்தனைகளே உலக சமாதானத்தை உறுதியாகவும் விரைவாகவும் ஏற்படுத்த முடியுமென்று ஜனாதிபதி ரீகன் கருத்து பரிமாறியதாகச் செய்தி கூறுகிறது.

இதனைவிட இனிப்பான செய்தியாக பாப்பரசர் எகரிடமிருந்தும் இன்று எதிர்பார்க்கலாமென்று எம் மனோகரமே தெரியுமென்றாலும் உலகை உள்ளங்கையில் வைத்து உறிஞ்சிக்குடிக்க வல்ல அதிகாரமும், அதனை வெறு விதத்தில் நடத்தக் காட்டும் ஆற்றலுமுடைய ரீகனுக்குத் தெரியாதா?

ஒரு நூற்றாண்டு காலமாக வத்திக்கானும் அமெரிக்காவும் நட்பு குறித்த நிலையிலிருந்து அண்மையில் நல்லுறவை ஏற்படுத்தியிருப்பது உலக சமாதானத்துக்கு உதவுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முக்கியக்கூடமாக இருப்பது அமெரிக்க அரசியலில் வெளிநாட்டுக் கொள்கை. அதில் பிரார்த்தனைக்கு எவ்வித இடமுமிருப்பதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதி அவர்களின் தனிப்பட்ட நம்பிக்கை இது வாகலும், இன்றைய அமெரிக்க அரசியல். அமெரிக்க ராணுவ தொழிற் நிறுவன ஆதிக்கத்தில் சிக்கியிருப்பதை அறிந்தவர்கள் ஜனாதிபதியின் பிரார்த்தனைக்குத் தீர் இவருமில் நம்பிக்கை வைக்கமாட்டார்கள்.

அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரம் மிகவும் பெரியது- அமெரிக்க மக்களின் பேராதரவை அது பிரதிபலிக்கிறது; அந்த அளவில் அது ஜனநாயகத்தின் சிறப்பை வெளிப்படுத்துகிறது.

ஆனால் உள்ளூர்க்கு நடைபெறும் பொறியியல் நாடகம் அதிகாரத்தை ஆட்டி வைக்கும் இராணுவ இராணுவ நிறுவனங்களுக்கு உரித்தாகிவிடுகிறது.

எங்கள் நாடுகள் எதிரி அரசியல் இரண்டு இலவுகாக்க விளக்கு முடியாவிடினாலும், இடம் பொருள் ஏவல் பலமுடைய பிரமுகர்கள் ஒன்றுபட்டு ஒரு கருவியின் ஆட்சியை பலமிழந்தால், மக்கள் ஆதரவைத் திரட்ட வேறான வழிகளை நாமே நிறைவேற்றலாம்.

'கவிஞர்களின் குழு' விடம் கைவிடப்பட்டமையாக விளக்கும் ஆயுதங்கள் கடந்த ஜனாதிபதி ரீகன் தேர்தலெடுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது வல சந்

இலங்கைத் தமிழர் பிரச்னை

"தீயை அணைப்பதற்குப் பதிலாக சிலர் ஊதிவிடுகிறார்கள்!"

தமிழக வார சஞ்சிகை வெளியிடும் கருத்து

அணைந்து விட்டதாகக் கருதப்பட்ட இலங்கைத் தீ மறுபடி கொழுந்துவிட ஆரம்பித்திருக்கிறது. வேர்க புலவைத் தொடங்கியதுமே ஆர்வமுள்ளவர்கள் அதனை அணைத்திருக்க வேண்டும். மாறாக அவர்கள் ஊதிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் இன்றைய இலங்கையின் குழப்பநிலைக்கு காரணம்.

இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளிவரும் 'சாவி' வார இதழில் ஆசிரியர் தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளது. மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"வேற்று நாடுகளுக்கு தூண்டுதலால் இலங்கை கலவரத்துக்கு காரணம் என்கிறார் இலங்கைப் பிரதமர் ஆர். பிரேமதாசா.

"தமிழகத்து அரசியல் கட்சிகள் தான் இலங்கைத் தமிழர்களுக்கு தூண்டிவருகின்றன. பலருக்கு போர் பயிற்சிகூட தமிழகத்தில் அளிக்கப்படுகிறது. என்கிறார் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா. அண்டை நாடுகளைப்பற்றி பேசும்போது இப்படியெல்லாம் பொறுப்பில்லாமல் குறிப்பிடுவது சரியல்ல என்பதை ஒரு நாட்டின் தலைவர் பொறுப்பிலுள்ளவர்கள் உணரவேண்டும்.

"இலங்கையில் முன்னாள் பிரதமர் திருமதி பண்டாரநாயகாவின் சில கருத்துக்கள் வன்மையாக ஈர்க்கின்றன. அண்டை நாட்டுடன் நட்புறவாக இருக்கவேண்டுமென்ற அடிப்படை உண்மையை ஆட்சியில் இருப்பவர்கள் மறந்துவிட்டார்கள் என்று எடுத்துக்காட்டியிருக்கிறார் "இந்திய நாட்டுடன் இருந்தாலும் இரண்டாயிரம் வருட நட்பை அவமதிக்கும் செயலாகும் அழிக்க" என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்த அறிவுரைக்காக அவரைப் பாராட்டலாம்

கடவே இப்போதுள்ள அரசு

(7ம் பக்கம் பார்க்க)

புதிய சிந்தனை

'இறைபணி நிற்றல்'

நூல்: இறைபணி நிற்றல்.
ஆசிரியர்: நா. செல்லப்பா.

செய்யாமல் அருளிய இவ்ஞான போதம் பத்தாம் குறிரத்தில் இரண்டாவது அடி 'ஏகனாகி இறைபணி நிற்க' என்பதாகும். இதனை அடிநிலையாகக் கொண்டு நா. செல்லப்பா அவர்கள் தாராண நியாயத்தில் பெற்றுக்கொண்ட உண்மைகளின் நூல் வடிவே

நூல் ஆய்வு

"இறைபணி நிற்றல்" ஆகும். இந்நூல் ஆசிரியர் முன்னாகும் 'பிதாமகர் கடவுளாகி' முதலாகிய சில நூல்களை எழுதியுள்ளார்.

எழுத்தாக வெளிவரும் சமய, தத்துவ நூல்களிலிருந்து இந்நூல் பலவகைகளிலும் வேறுபட்டு விளங்குகிறது. கிளிப்பிள்ளையைப்போல முன்னோர் சொன்னவற்றையே திரும்பத் திரும்ப எடுத்துக்கூறி சலிக்க வைத்துவிடும் போக்கை மேலை சமய நூல்களிற் கண்டுவந்த எமக்குப் புதிய ஊக்கத்தையும் நம்பிக்கையையும் புதிய சிந்தனையையும் 'இறைபணி நிற்றல்' வழங்குகிறது என்று கூறுவது மிகையுரையன்று. சிந்தனையைக் கடந்த, நினைப்பற நினைக்கின்ற ஏகனாக நிற்கின்ற ஒரு மேலான நிலைக்கு எல்லை நூலாசிரியர் வழிநடத்த முற்படுகிறார். சமயம், தத்துவம், விஞ்ஞானம், அளவையியல் என்ற பலதுறைகளிலும் இவர் சஞ்சரித்தவற்றைப் புறந்தள்ளித் தாராண நியாயத்தில் தாம் தெளிந்தவற்றைத் தெளிவாகக் கூற இவர் முயலும் பொழுது அதற்கு சத்திய தரிசனத்தைக் காணுகின்றது.

இன்றைய குழப்ப நிலைஞர்களும் இளைஞர்களின் அமைதியின்மைக்கும் சமயக் கல்வி சரியான வகையில் அளிக்காமையே காரணமாகுமென்பது செல்லப்பா அவர்களின் கருத்து. சமயக் கல்வி எவ்வாறு அமைதல்வேண்டும் என்பதற்கு இவர் தரும் விளக்கம் வருமாறு:-

"சமயக் கல்வி யதிலும் முறை பொதுக் கல்வி பலதும் முறை போன்றதல்ல. பொதுக் கல்விகளைச் சீடன் குருவிடமிருந்து பெறலாம். ஏனெனில், அது ஒரு சம்பாத்திய மாகும். எதை பொருட் சம்பாத்தியத்தையும் பத்திரமாகப் பெட்டகத்தில் பூட்டிவைத்திருக்கலாம். பொதுக் கல்விச் சம்பாத்தியத்தையும் பத்திரமாக அறிவாலும் எண்ணங்களாலும் மூளையில் பதிவுசெய்து வைத்திருக்கலாம். எனினும், மனிதனுடைய சம்பாத்தியத்தைக்கூட அனுபவமாக மலர்ச்சியுறச் செய்ய (Creativity) மேலானதொரு பொறியினால்கூட வளர்த்துகின்றனர். நவீன கல்வி முறை விரைவாக மலர்ச்சியின் சக்தியை உள்ளிருந்து வெளிக் கொணர்வதற்கு வழிகாட்டியாக உள்ளது புதியவற்றை அறிவு அனுபவத்தாற் கண்டு பிடித்தல் அரிதாகும். ஆத்மீக அறிவு அனுபவத்துக்கு அப்பாற்பட்டது. ஆத்மீக வழிப் புணர்வுபெற்ற அடியார் "கண்டறியாதன கண்டோம்" எனவே கூறுகின்றனர். உண்மையான சமயக் கல்வி கண்டறியாதவற்றைக் காண்பதற்கு வழிகாட்டியாகும்."

(பக்: 50)

மனத்தின் இயல்பை, இருமைப்படு, நித்தியமாகிய தன்மை குறைபாடு, 'பலபத்தி' என்ற கருதுகோளின் பொருத்தப்பாடின்மை, 'திருவேறு தெய்வமுமாகும் வேறு' என்பதன் திரு, தெய்வ சம்பவத்தின் கான உண்மை விளக்கம், கடந்த கோதுமதன் அவியுறுதல் என்ற மகாவாக்கியங்கள் மீது தெளிவான இந்நூலில் விளக்கப்படுகின்றன

(3-ம் பக்கம் பார்க்க)

விளையாட்டு, கலைத்துறையில் இவருக்கு ஒருங்கே ஆர்வம்!

விளையாட்டுத் துறையில் ஈடுபடுவர்கள் கலைத்துறையில் ஆர்வம் காட்டுவதில்லை. அதே போன்று கலைஞர்கள் உடையவர்கள் விளையாட்டுத் துறையில் நாட்டமுறுவதில்லை. இவ்விரு துறைகளுக்கிடையிலுந் வேறுபடும் இவர்களில் ஒருவரே இவிதொடர்பினைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகமுத்து திரவியராஜ்

கல், விளையாட்டுத்துறையில் ஒருங்கே ஆர்வமுடைய 18 வயதான இவ் இளைஞர் இயற்றிய நல்கு வரவேண்டுமென்று விரும்புகிறார். இவ்வளர்கியமர் தனது பிரதேசமும், தாய் சார்ந்த கலைகளும் பெருமையுற வேண்டுமென்பது இவர் விருப்பமாகும்.

திரவியராஜ் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பாடசாலை நாட்களிலிருந்து இவருக்கு கல் விளையாட்டுத் துறையில் மிகுந்த ஈடுபாடு. மேடையில் இவர் ஒரு நடிகர், பாடகர், பேச்சாளர், அறிவிப்பாளர். மைதானத்தில் ஒரு வெல்லக்கூடியவர், விளையாட்டு வீரர்.

பிரபல தமிழ்த் திரைப்பட



நாகமுத்து திரவியராஜ்

நடிகர்களைப் போன்று அவர்களின் குரல்களிலேயே பேசுவது இவருக்கு வாய்த்த கலை. இதனால் நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனின் குரலில் ஏற்படுகிற மாற்றங்களை இவரால் அப்படியே பேசிக்காட்டமுடிகிறது. தொலைபேசியைத் தாராளமாக எம். ஜி. ஆர். கொண்டிருந்த ஒரு

(5ம் பக்கம் பார்க்க)

காலத்திற்கேற்ற கட்டுரைகள்

திரு மாணிக்க இடைக்காடரின் பொருள் பொதிந்த கட்டுரைகளை வரவேற்கிறோம். இன்றும் ஆயிரக்கணக்கான நேயர்களில் நானும் ஒருவன் வரை முதிர்ந்தவராலும் இப்போது இளைஞர்களாலும், அவ்வளவுக்கு தரவேண்டிய பிராயத்தினராலும் உள்ள, பலர் படித்துப் பயன்பெறத்தக்கதாக இக்கட்டுரைகளை எழுதி வருகிறார். அவரது கட்டுரைகளில் இலக்கியச்சுவை, பண்பாட்டுச்சிறப்புகளை அன்றாட உள்நாட்டு வெளிநாட்டு உத்தியோக ரீதியான

மக்கள் கருத்து

அனுபவங்கள், ஆதாரங்களை மிகுந்த அருமையான முறையிலே கையாளப்படுகின்றன. இவற்றை வாசிக்கும் ஒருவர் அவற்றை இலகுவில் உணர்ந்து மகிழ்ந்து மற்றவரோடும் பகிர்ந்து கொள்கிறார்.

இதனால், எமது பிரதேசத்தில் முதலிடமும் முன்னுரிமையும் கொடுக்கப்படவேண்டியவை, எமது மக்கள் தரமான கல்வி கிடைக்கப்படவேண்டியவை, எல்லாம் மக்களுக்கு உணர்த்தப்படுகின்றன குறிப்பாக இளைஞர்களுக்கும் வெளியோர்களுக்கும் இடையில் தோன்றக்கூடிய முரண்பாடுகள் நீக்கப்படுகின்றன ஒடும் பகையிலும், மனதிலும் சமூகத்திலும் எழக்கூடிய சந்தேகங்கள் போக்கப்படுகின்றன. எல்லோரும் தெளிந்த சிந்தனையையும், யார் ஏற்றது செய்தாலும் அதை ஏற்கக்கூடிய தன்மையையும் பெற முடிகிறது

பாடசாலையிலே கூட ஆசிரியர் ஆசிரியர் உறவிலும் ஆசிரியர் மாணவர் உறவிலும் தோன்றக்கூடிய பல்வேறு பிரச்னைகளுக்கு அவைபரிகாரம் காண உதவுகின்றன.

(7ம் பக்கம் பார்க்க)

சஹஸ்ர சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அராலியம்பதி கண்ணகை அம்மன் ஹரி ஹர புத்திர கலாசமிதி சஹஸ்ர சங்காபிஷேகம் நாளை பிரதம குரு வேதவிநாயகம் சிவஸ்ரீ நாராயணக் குருக்கள் தலைமையில் நடைபெறுகிறது இதனைத் தொடர்ந்து அன்னதானம் நடைபெறும்.

தேசிய இளைஞர் சேவைகள் நிர்வாகம்

கிளிநொச்சி மன்னார் வவனியா அனுராதபுரத்துடன் இணைப்பு

(மன்னார்பகுதி)

கிளிநொச்சி மன்னார், முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர்சேவைமன்ற நிர்வாக அலுவலகங்கள் யாழ். வடமத்திய மாகாணத்திலுள்ள அனுராதபுரம் இளைஞர் சேவை அலுவலகத்துடன் இணைக்கப்படவிருக்கின்றன. இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய இளைஞர் மன்றங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மன்னார் மாவட்ட இளைஞர்சேவை அலுவலக நடவடிக்கைகள் இதுகாலவரை யாழ்ப்பாண மாவட்டத்துடனேயே இணைந்திருந்தது.

அம்பாறை பொலநறுவை மட்டக்களப்பு ஆகிய மாவட்ட இளைஞர்சேவை நிர்வாகம் ஏற்கனவே ஒன்றாக இருந்த போதும் இந்த மாவட்டத்துடன் திருகோணமலை மாவட்டம் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே, திருகோணமலை மாவட்ட இளைஞர் சேவை நிர்வாகம் அனுராதபுரத்துடன் இணைந்திருந்தது.

ஆயினும் திருகோணமலைக்கான நிர்வாகவிடயங்கள் தேசிய இளைஞர் பயிற்சிநிலையம் ஒன்று தனியாக இயங்கியதும் இப்பகுதியில் இளைஞர்களுக்கேற்றதிட்டம் ஒன்று உருவாக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

மன்னார் வவனியா திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தேசிய இளைஞர்சேவை நிர்வாகத்தை ஒன்றிணைக்குமாறு ஏற்கனவே பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதிலும் இம்மாவட்ட அலுவலகங்கள் ஒன்றிணைக்கப்படவில்லை. இதற்குப் பதிலாக மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அலுவலகங்கள் யாழ் மாவட்டத்திலிருந்து பிரித்து அனுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்படுவது தேசிய இளைஞர் மன்றத்தில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தேசிய இளைஞர் மன்றங்களின் பிரதிநிதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

திறந்தவெளி பல்கலைக்கழக வெளிக்கள பயிற்சிவகுப்புகள்

(கிளிநொச்சி)

திறந்த வெளி பல்கலைக்கழகத்தின் கல்வி பயிலும் குடிசார் இயற்திறமியல் மாணவர்களுக்காக நில அளவையும் மட்டம் பார்த்தலுமான வெளிக்கள பயிற்சி வகுப்புக்கள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

இதற்கான கற்றறிநரும் ஒன்று சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு மேற்படி பல்கலைக்கழக அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அச்கற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளதாவது: பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 5ம் திகதி ஆரம்பமாகி ஜூன் மாதம் 30ம் திகதி முடிவடையும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சியை அளிப்பதற்கு நில அளவைத்திணைக்கள உயர் அதிகாரிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இப்பயிற்சியை அளிக்கவென யாழ்ப்பாணத்தில் இரு அதிகாரிகளும் கிளிநொச்சியில் ஒரு அதிகாரியும், மட்டக்களப்பில் இரு அதிகாரியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற பயிற்சி வகுப்புக்கள் தென் இலங்கையிலும் நடைபெற இருக்கிறது.

விளையாட்டு...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

பேசுகிறார். கூடவே சூடிக்கிளப்பர் குரலில் ஏற்பட்ட மாற்றத்தையும் இவர்பேசிக் காட்டுகிறார்.

'நான் நமதே' என்றதிரைப்படத்தில் காதல் காட்சி வொன்றில் சூடுபட்ட காதலர் தம் குரலில் எம். ஜி. ஆர். பேசிய சில வசனங்களை பேசிக் காட்டினார். அப்போது 'இது யார் எம். ஜி. ஆரா பேசுவது?' என்று எண்ணியோ நிஜமாகவே எனக்கு வேறு சந்திப்பிக் வந்து வந்து கொண்டனர். பிள்ளை செல்லையா வேண்டும்? இவரைப்போல் பேசும், அவரைப்போல் பேசும் என்று வேண்டுதல்கள். சங்கீதமக் கலைஞரிதியாக, எம். ஜி. ஆராக, இவர் ஜிமாக, எம் ஆர். ராதாவாக, நம்பியாராக அவரவருக்குரிய குரல்களிலேயே தமது குரலை இவர் கச்சிதமாக மாற்றிக் காட்டினார். இதனைக் டுமல்ல தமது வானொலி அறிவிப்பாளர்கள் சிலர் போல்றும் அவர்களின் வாணிமாறாது இவராக பேசமுடிகிறது.

தமக்குள்ள வேத்த வல்லமை மூலம் இவர் ஒரு தொழிலிக் இறங்கியுள்ளார் நிரைவரைகுளின் இடைவேளையின்போது வர்த்தக விளம்பரங்களைச் செய்வதே இத்தொழில் இடைவேளையின்போது நிரைவரங்குளின் கண்ணாடி வில்லைகளில் (Slide) வளர்பரங்களைப் போட்டுக் காட்டுவதே வழக்கம். ஆனால் இவரின் வாணி வாம்மூலமாக வானொலியில் போல்று விளம்பரங்களை அறிவிப்பது. வாழ். நகரில் உள்ள பல நிரை அரங்குகளில் இவர் இப்படி அறிவிப்புகளைச்செய்து வருகிறார் இத்தகைய அறிவிப்பதற்காகவே வாழ்ப்பாணத்திலே அறிமுகம் செய்திருப்பதாகவும் இவர் கூறுகிறார்.

